# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு

## பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

### இலங்கை மத்திய வங்கி

மாச்சு 2020
தொகுதி 02 வெளியீடு 03

## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்




2020 மாச்சில் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 656 மில்லியனுக்கு 42.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




2020 மாச்சில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,205 மில்லியனுக்கு 30.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதம் (%)




2020இன் முதல் காலாண்டுப் காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 16.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிச் செலவினமும் 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

### வர்த்தகப் பற்றாக்குறை (ஐ.அ.டொ. மில்)




வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2019 மாச்சில் ஐ.அ.டொலர் 592 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 மாச்சில் ஐ.அ.டொலர் 549 மில்லியனுக்கு விரிவடைந்ததைப் பதிவுசெய்தது.

## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் - (2020 சன - மாச்சு)

### ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ. மில்)




### இறக்குமதிகள் (ஐ.அ.டொ. மில்)



# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் (சன-மாச்சு)




### ஏற்றுமதி அளவுச் சுட்டெண் (சன-மாச்சு)




2020இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் அனைத்து முக்கிய வகைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சிக்கு உந்தப்பட்டது.

2020இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் அனைத்து முக்கிய வகைகளின் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட குறைவின் காரணமாக கைத்தொழில் அளவுச் சுட்டெண் வீழ்ச்சியடைந்தது.

## வேளாண்மை ஏற்றுமதிகள்

### வேளாண்மை ஏற்றுமதிகள்




### வேளாண்மை ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதி சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-மாச்சு)




### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்*




* கொழும்பு ஏல விலைகளை அடிப்படையாகக் கொண்டது

2020 இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு, தேயிலை, வாசனைத் திரவியங்கள், கடலுணவு மற்றும் தெங்கு என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான தாழ்ந்தளவிலான வருவாய்களே பிரதான காரணமாகும். எனினும், சிறுவேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் இக்காலப்பகுதியில் அதிகரித்தன.

# கைத்தொழில் ஏற்றுமதிகள்

### கைத்தொழில் ஏற்றுமதிகள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-மாச்சு)




### நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருள்களின் ஏற்றுமதி விலைகள்




2020இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமைக்கு புடவை மற்றும் ஆடை உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பனவற்றின் ஏற்றுமதிகளின் தாழ்ந்த செயலாற்றமே காரணமாகும். எனினும், இக்காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமைக்கு 2020இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் நீர்க்கல எரிபொருட்களின் உயர்ந்தளவான விலைகளே பிரதான காரணமாக அமைந்தன.

# இறக்குமதிச் செயலாற்றம்

### இறக்குமதிச் செயலாற்றம் (சன-மாச்சு)




### இறக்குமதி அளவுச் சுட்டெண் (சன-மாச்சு)




2020இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் குறைவடைந்தமைக்கு இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மீது ஏற்பட்ட தாழ்ந்தளவான செலவினமே பிரதான காரணமாகும். அதேவேளை, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளில் தாழ்ந்தளவான இறக்குமதி அளவுடன் அவதானத்திற்குட்பட்ட காலப்பகுதியில் இறக்குமதி அளவுச் சுட்டெண் சிறிதளவாகக் குறைவடைந்தது.

## நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள்

### நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி




### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-மாச்சு)




### சீனி, தானியங்கள் மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்




2020இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்குக் குறிப்பாக முக்கிய வகைகளான காய்கறிகள், சீனி மற்றும் இனிப்பு வகைகள் மற்றும் பாலுற்பத்திகள் போன்ற உணவு வகைகளின் உயர்ந்தளவிலான இறக்குமதிகள் காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும், காலப்பகுதியில் கடலுணவு, தனியாள் வாகனங்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் என்பன மீதான செலவினம் குறைவடைந்தன.

## இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்

### இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்




### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



### இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செயலாற்றம் (சன-மார்ச்சு)




### மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்தச் சராசரிகள்)




2020இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமைக்கு எரிபொருள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மற்றும் அடிப்படை உலோகங்கள் போன்ற பொருட்களின் இறக்குமதிகள் மீதான குறைந்த செலவினமே பிரதான காரணமாகும். எவ்வாறாயினும், காலப்பகுதியில் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள், உணவுத் தயாரிப்புக்கள் மற்றும் வேளாண்மை உள்ளீட்டுப் பொருட்கள் போன்ற பொருட்கள் மீதான செலவினம் அதிகரித்தது.

## முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள்

### முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செயலாற்றம் (சன-மார்ச்சு)




2020இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமைக்கு பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதிகள் குறைவடைந்த போதிலும் போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதிகள் அதிகரித்திருந்தமையே பிரதான காரணமாகும்.

# வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு

## ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 19-மார்ச்சு | 20-மார்ச்சு | ஆ-ஆ மாற்றம் (%) | சன - மார்ச்சு 2019 | சன - மார்ச்சு 2020 | ஆ-ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **232.3** | **122.7** | **-47.2** | **647.7** | **506.5** | **-21.8** |
| இதில் | தேயிலை | 125.9 | 62.5 | -50.3 | 347.2 | 270.1 | -22.2 |
| | தெங்கு | 34.8 | 19.7 | -43.4 | 87.8 | 70.4 | -19.8 |
| | வாசனைத்திரவியங்கள் | 24.2 | 12.9 | -46.6 | 80.6 | 51.0 | -36.7 |
| | கடலுணவு | 28.2 | 12.8 | -54.8 | 80.9 | 57.0 | -29.6 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **898.4** | **531.5** | **-40.8** | **2,494.3** | **2,134.1** | **-14.4** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 532.7 | 312.7 | -41.3 | 1,474.2 | 1,254.9 | -14.9 |
| | இறப்பர் உற்பத்திகள் | 82.6 | 54.5 | -34.1 | 233.0 | 196.2 | -15.8 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 48.0 | 37.0 | -22.9 | 124.0 | 177.7 | 43.2 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 47.3 | 38.1 | -19.3 | 135.9 | 110.3 | -18.9 |
| | பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 39.0 | 21.1 | -45.8 | 108.0 | 86.4 | -20.0 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 32.1 | 8.6 | -73.3 | 83.3 | 54.6 | -34.5 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 9.6 | 3.7 | -61.4 | 33.2 | 16.6 | -50.1 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **6.2** | **2.2** | **-64.7** | **14.1** | **9.1** | **-35.7** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **1,136.9** | **656.4** | **-42.3** | **3,156.1** | **2,649.7** | **-16.0** |

## இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 19-மார்ச்சு | 20-மார்ச்சு | ஆ.ஆ. மாற்றம் (%) | சன - மார்ச்சு 2019 | சன - மார்ச்சு 2020 | ஆ.ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **351.9** | **267.1** | **-24.1** | **912.3** | **966.1** | **5.9** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 138.0 | 143.0 | 3.6 | 334.9 | 426.4 | 27.3 |
| இதில் | அரிசி | 1.0 | 1.0 | 6.9 | 4.3 | 4.6 | 7.0 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 213.8 | 124.0 | -42.0 | 577.4 | 539.7 | -6.5 |
| இதில் | தனியாள் வாகனங்கள் | 72.2 | 39.5 | -45.3 | 169.8 | 156.4 | -7.9 |
| **இடைநிலைப் பொருட்கள்** | | **987.1** | **699.7** | **-29.1** | **2,774.2** | **2,545.7** | **-8.2** |
| இதில் | எரிபொருள் | 407.9 | 237.7 | -41.7 | 1,018.6 | 948.2 | -6.9 |
| | புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 213.9 | 139.3 | -34.9 | 688.6 | 622.0 | -9.7 |
| | வளமாக்கிகள் | 39.3 | 6.7 | -83.1 | 48.4 | 25.9 | -46.5 |
| | கோதுமை மற்றும் சோளம் | 12.0 | 62.5 | 419.3 | 53.2 | 79.8 | 49.9 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **390.1** | **238.2** | **-38.9** | **1,130.4** | **990.9** | **-12.3** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 213.9 | 130.2 | -39.1 | 639.0 | 572.4 | -10.4 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **1,729.0** | **1,205.0** | **-30.3** | **4,816.9** | **4,502.7** | **-6.5** |

## வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | 19-மார்ச்சு | 20-மார்ச்சு | ஆ.ஆ. மாற்றம் (%) | சன - மார்ச்சு 2019 | சன - மார்ச்சு 2020 | ஆ.ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | -592.2 | -548.7 | - | -1,660.8 | -1,853.0 | - |

## வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (அ)

| விடயம் | | 19-மார்ச்சு | 20-மார்ச்சு | ஆ.ஆ. மாற்றம் (%) | சன - மார்ச்சு 2019 | சன - மார்ச்சு 2020 | ஆ.ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 158.2 | 93.3 | -41.0 | 146.4 | 123.6 | -15.6 |
| | அளவுச் சுட்டெண் | 195.2 | 107.3 | -45.1 | 156.2 | 130.5 | -16.4 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 81.1 | 87.0 | 7.3 | 93.7 | 94.7 | 1.0 |
| இறக்குமதி | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 154.7 | 107.8 | -30.3 | 143.7 | 134.3 | -6.5 |
| | அளவுச் சுட்டெண் | 170.8 | 139.4 | -18.4 | 158.4 | 156.6 | -1.1 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 90.6 | 77.4 | -14.6 | 90.7 | 85.8 | -5.5 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | 89.5 | 112.4 | 25.7 | 103.3 | 110.4 | 6.8 |

(அ) ஐ.அ.டொ. நியதிகளில்